இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 27.01.2026

# மோடி இழைத்த அநீதிகள்!

தமிழ்நாட்டுக்கு வாக்குக் கேட்டு வரும் பிரதமர் நரேந்திர மோடி, இதுவரை தமிழ்நாட்டுக்குச் செய்தது என்ன? அநீதியும், துரோகங்களும் மட்டும்தான். இவரெல்லாம் எந்த முகத்தை வைத்துக் கொண்டு வாக்குக் கேட்டு வருகிறார் என்றே தெரியவில்லை.

**பீகார் மாநிலத்துக்கு வாக்குக் கேட்டுப் போன பிரதமர் மோடி அங்கு என்ன பேசினார்? பீகாரிகளை தமிழ்நாட்டில் தாக்குகிறார்கள் என்று பொய் சொன்னார். கர்நாடகா, தெலங்கானாவைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், பீகார் மக்களைத் தொடர்ந்து அவதூறு செய்வதாகவும், தமிழ்நாட்டிலும் பீகார் மக்கள் தொடர்ந்து துன்பத்துக்கு உள்ளாவதாகவும் பிரதமர் மோடி பேசினார்.**

**எந்த இடத்தில், எப்போது தாக்கப்பட்டார்கள் என்று அவரால் சொல்ல முடியவில்லை. அப்படி நடந்தால்தானே சொல்ல முடியும்?**

தி.மு.க.வுடன் பீகார் மாநிலத் தலைவர்களில் ஒருவரான லாலுவும் அவர் மகன் தேஜஸ்வீயும் நட்புடன் இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, 'அத்தகைய நண்பர்கள் ஆளும் தமிழ்நாட்டில் பீகாரிகள் தாக்கப்படுகிறார்கள்' என்று அவதூறு பரப்புரையை பீகாரில் செய்த மோடிக்கு தமிழ்நாட்டுக்கு வாக்குக் கேட்கத் தகுதி இருக்கிறதா?

இதையேதான் ஒடிசாவிலும் செய்தார் பிரதமர் மோடி. ஒடிசாவில் நவீன் பட்நாயக்குடன் ஒரு தமிழ் அதிகாரி இருந்தார். நவீன் பட்நாயக்கை அரசியல் ரீதியாக வீழ்த்த அந்த தமிழ் அதிகாரி மீது பாய்ந்தது பா.ஜ.க. 'ஒடிசாவை ஒரு தமிழர் ஆள அனுமதிக்கலாமா?' என்று கேவலமாகக் கேட்டதையும் இந்த நாடு பார்த்தது. 'பூரி ஜெகந்நாதர் கோவில் சாவியைக் காணோம், அது திருடப்பட்டு தமிழ்நாட்டில் கொண்டு போய் வைக்கப்பட்டுள்ளது' என்று சொல்லி ஒடிசாவில் பரப்புரை செய்தது பா.ஜ.க. தமிழ்நாடு என்ன திருட்டுப் பொருளை பதுக்கி வைக்கும் மாநிலமா? இத்தகைய மோடிக்கு, தமிழ்நாட்டுக்குள் வந்து வாக்குக் கேட்கத் தகுதி இருக்கிறதா?

**தமிழில் பேச முடியவில்லையே என்று வருந்தும் பிரதமர் மோடி, தமிழை உலகம் முழுக்கப் பரப்புவதாகச் சொல்லிக் கொள்ளும் மோடி, தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? தமிழை விட எத்தனை மடங்கு அதிகம் என்பதைக் கேட்டுப் பாருங்கள்.**

**இருமொழிக் கொள்கை உள்ள தமிழ்நாட்டில் இந்தியைத் திணிப்பதற்காக மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வரும் மோடிக்கு தமிழ்நாட்டுக்குள் வந்து வாக்குக் கேட்கத் தகுதி இருக்கிறதா? இந்தித் திணிப்பில் மட்டும் தான் மோடி அரசுக்கு ஒரே அக்கறை உள்ளது.**

ஒன்றியத்தில் காங்கிரஸ் கட்சி, தி.மு.க. ஆதரவுடன் இருந்த காலக்கட்டத்தில் எல்லாம் எத்தனையோ சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்தது தமிழ்நாட்டுக்கு. அப்படி ஏதாவது ஒரு சிறப்புத் திட்டம் உண்டா மோடி ஆட்சியில்? ஒன்றே ஒன்றை அறிவித்தார்கள், மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை என்று. பத்தாண்டுக் காலமாக கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். நிதியே ஒதுக்குவது இல்லை. ஒரு எய்ம்ஸ் மருத்துவமனைக்குக் கூட தமிழ்நாடு வொர்த் இல்லையா? அப்படித்தானே மோடி நினைக்கிறார்?

"டெல்லியில் இருந்து இந்தியா முழுமைக்கும் திட்டமிடுவது என்பது அகற்றப்பட்டு - அந்தந்தப் பகுதியில் இருப்பவர் துணையோடு திட்டமிடுவதுதான் என்னுடைய அணுகுமுறையாக இருக்கும்" என்று பிரதமர் ஆனதும் சொன்னவர் தான் மோடி. இந்த அடிப்படையில் எதற்காவது மாநில அரசாங்கத்துடன் கலந்து ஆலோசனை செய்துள்ளாரா பிரதமர்?

**மாநில உரிமைகள் என்று சொல்லப்பட்ட அதிகாரங்களையும் சேர்த்து ஒன்றிய அரசுதான் அனுபவித்துக் கொண்டு இருக்கிறது.**

**'எங்களுக்கு ஏன் நிதி தர மறுக்கிறீர்கள்?' என்று தமிழ்நாடு முதலமைச்சர் கேட்பதை பிரிவினைவாதம் என்று கொச்சைப்படுத்துகிறார்கள். 'குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?" என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர்தான் பிரதமர் மோடி. அதையே தமிழ்நாடு முதலமைச்சர் இன்று கேட்கும் போது பிரிவினைவாதமாக எப்படி ஆகும்?**

சென்னையில் இன்று மெட்ரோ ரயில் ஓடுகிறது என்றால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் பெற்று தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியைச் செய்வதற்குக் கூட நிதி தருவது இல்லை. ஒன்றிய அரசும், மாநில அரசும் சேர்ந்து செய்யும் திட்டத்தில் கூட ஒன்றிய அரசின் நிதியையும் மாநில அரசே போடும் நிலைமையை உருவாக்கி விட்டார்கள்.

**43 லட்சம் பள்ளிக் குழந்தைகளின் நலனுக்காகச் செலவு செய்ய வேண்டிய 3,500 கோடி ரூபாயை மும்மொழித் திட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள் என்று சொல்லி நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.**

தமிழ்நாட்டில் இருந்து 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லிக்கு வந்து முழக்கமிடுவது மோடி தரப்புக்கு பிடிக்கவில்லை. தொகுதி வரையறை என்ற பெயரால் அதை குறைக்கச் சதி செய்கிறார்கள். 'தமிழ்நாட்டில் தொகுதிகள் குறையாது' என்று இதுவரை அதிகாரப்பூர்வமாகச் சொல்லவில்லை.

**குஜராத்தில் இயற்கை பேரிடர் நடந்தால் அன்று மாலையே 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குவதும்- தமிழ்நாட்டில் பேரிடர் நடந்து மூன்று ஆண்டுகள் ஆனபிறகும் - ஒரு சதவிகித நிதிகூட ஒதுக்காததும்தான் மோடியின் குணம். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை அராஜகவாதிகள் என்று சொன்னவர் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான். 'தமிழ்நாட்டில் இருந்து வந்து குண்டு வைக்கிறார்கள்' என்று இன்னொரு ஒன்றிய அமைச்சர் சொன்னார். இதுதான் பா.ஜ.க.வினரின் உண்மையான குணம் ஆகும்.**

**இது தமிழ்நாட்டில் செல்லுபடி ஆகாது. பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு எத்தனை தடவை வருகிறாரோ, அது பா.ஜ.க.வுக்கு மிகப்பெரிய கெடுதலாகவே அமையும். தமிழுக்கு, தமிழ்நாட்டுக்கு எதிரிகள் இவர்கள் என்பதை மோடி முகம் நினைவூட்டிக் கொண்டே தான் இருக்கும். வருக பிரதமர்!**



தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் நேற்று (26.1.2026) சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மொழிப்போர் தியாகிகளின் வீரவணக்க நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (25.1.2026) மாலை சைதை தேரடித்திடலில் மாபெரும் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் அமைச்சர் துரை.முருகன் மற்றும் ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மயிலை த.வேலு, ஜெ.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, வே.ஆனந்தம், எம்.விநாயகமூர்த்தி, வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், நொளம்பூர் வே.ராஜன், கோவிலம்பாக்கம் வெங்கடேசன், துரை.வீரமணி உள்ளிட்ட ஏராளமான தி.மு.கழகத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

## சென்னை கிண்டியில் 6.50 ஏக்கரில் ரூ.417.07 கோடி மதிப்பில்

# குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடம் - முதல்வர் இன்று அடிக்கல் நாட்டுகிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

**சென்னை, ஜன.27–**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (27.01.2026) சென்னை, கிண்டியில், 6.50 ஏக்கர் பரப்பளவில் ரூ.417.07 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக குழந்தைகளுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.**

14 வயது இளம் பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்புகளைமுன் கூட்டியே தடுப்பதற்கு உண்டான HPV (Human papilloma Virus) என்கின்ற தடுப்பூசி திட்டத்தினைதொடங்கி வைக்கிறார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கிண்டியில் அமையவுள்ள பிரத்யேக குழந்தை களுக்கான மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் அடிக்கல் நாட்டு விழா - குறித்தான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (25.01.2026) சென்னை, கிண்டி, கிங் நிலைய வளாகத்தில், 6.50 ஏக்கர் பரப்பளவில் ரூ.417.07 கோடி செலவில் அமையவுள்ள குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டிடத்திற்கு இன்று (27.01.2026) முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளதை தொடர்ந்து, இப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

### குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம்

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உலகளாவிய தரத்துடனும், உலகளாவிய பன்முகவசதியுடனும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இதே வளாகத்தில் கலைஞர்நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை மிகப் பெரிய அளவில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு மிகப் பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்தியாவில்வேறு எந்த மாநில அரசிலும் இல்லாத வகையில் அதிநவீனவசதிகளுடன் மிகச்சிறந்த பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதே மருத்துவமனை வளாகத்தில் இந்தியாவின் பிரத்யேகமான வயது மூத்தவர்களுக்கு என்று மருத்துவமனை பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் 2024 ஜீலை 28 அன்று தமிழ்நாட்டில் உலகத்தில் முதன்முறையாக உலகத்தரம் வாய்ந்த குழந்தைகளுக்கான உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, உலகிலேயே முதன்முறையாக உலகத் தரம் வாய்ந்த குழந்தை களுக்கான உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் ரூ.417.07 கோடி மதிப்பீட்டில் அமையவிருக்கிறது. இம்மருத்துவமனைக்கு வருகின்ற 27.01.2026 அன்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்ட உள்ளார்கள்.

இம்மருத்துவமனையில் 6 தளங்களுடன்கூடிய மருத்துவமனை கட்டடம், 3,37,990 சதுரஅடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 5 தளங்களுடன்கூடிய முதுகலை பட்டதாரிகள் மற்றும் செவிலியர்கள் குடியிருப்பு கட்டடம், 78,220 சதுரஅடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய பேராசிரியர்களுக்கான குடியிருப்புகட்டடம், 17,010 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் ஒரு தளத்துடன் கூடிய உணவகம்மற்றும் கூடுதல் வசதி கட்டடம், 30,324 சதுர அடி பரப்பளவு என்று ஆக மொத்தம் 4,63,544 சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்ட மருத்துவமனை கட்டப்படவிருக்கிறது. 6.5 ஏக்கர்நிலப்பரப்பில் அமையப் பெறவிருக்கின்ற இந்த மருத்துவமனை உலகளவில் குழந்தை களுக்காக உருவாக்கப்படுகின்ற பிரத்யேகமான ஒரு மருத்துவமனை.



இந்த மருத்துவமனையில்அவசர சிகிச்சை பிரிவு, புற மருத்துவ பயனாளிகள் பிரிவு, குழந்தைகளுக்கான நாளமில்லா சுரப்பிவார்டு, நுரையீரல் சிகிச்சை வார்டு, டயாலிசிஸ் வார்டு, இருதய சிகிச்சை பிரிவு, நரம்பியல்சிகிச்சை பிரிவு, எலும்பியல் சிகிச்சை பிரிவு, இரத்தவியல் பிரிவு, இரைப்பை குடல் அறுவைசிகிச்சை பிரிவு, சிறுநீரகவியல் பிரிவு, ஒட்டுறுப்பு சிகிச்சை பிரிவு, ஆராய்ச்சி ஆய்வகம்என்று பல்வேறு வகைகளிலான சிறப்புமிக்க பிரிவுகள் இம்மருத்துவமனையில் ஏற்படுத்தப்படஉள்ளது.

நிர்வாக அலுவலகம், இரத்த வங்கி காப்பகம், மயக்க மருந்தியல் பிரிவு, அறுவை சிகிச்சைஅரங்குகள், கேத்லேப் ஆய்வகம், அறுவை சிகிச்சைக்கு பிந்தைய வார்டு, அதிதீவிர சிகிச்சைபிரிவு, எலும்பு மஜ்சை மாற்று அறுவை சிகிச்சை பிரிவு என்று பல்வேறு வகைகளில் அதிநவீனமருத்துவ வசதிகள் இம்மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட உள்ளது. இம்மருத்துவமனை 18 மாதகாலத்தி ற்குள் இக்கட்டிடப் பணிகள் முடித்து தரப்படும் என்று பொதுப் பணித்துறை அலுவலர்கள்அவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை 24 மாத காலத்திற்குள் கட்டி முடித்து தரப்படும் என்று அறிவிக்கப்பட்டு 18 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது. அந்தவகையில் இந்த மருத்துவமனை 18 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும்என்று அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 27.01.2026 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கப்பட உள்ளது.

### கருப்பைவாய் புற்றுநோய் (HPV) தடுப்பூசித் திட்டம்

இந்தியாவில் முதன்முறையாக இளம் பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு என்பது உலகளவில் மிகப் பெரிய அளவில் பாதிப்பைஏற்படுத்தி வருகின்றது. இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்புற்றுநோய் என்பது கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர்அவர்கள் இன்றைக்கு தாயுமானவர் போன்ற திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி அனைத்துதரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் 14 வயது இளம் பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்புகளை முன்கூட்டியே தடுப்பதற்கு உண்டான தடுப்பூசி HPV (Human papilloma Virus) என்கின்ற தடுப்பூசியினை செலுத்துவதன்மூலம் தடுக்க இயலும் என்று WHO போன்ற உலக சுகாதார அமைப்புகள் சுட்டிக்காட்டியி ருக்கின்ற காரணத்தினால் தமிழ்நாட்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக HPV தடுப்பூசி இலவசமாக வழங்கிட முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சட்டமன்றத்தில் 2025 மார்ச் 14 ஆம்தேதி அறிவிக்கப்பட்டது. மக்கள் நல்வாழ்வுத்துறையின் நிதிநிலை அறிவிப்பு 100ன்படி இந்தஅறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்தவகையில் 14 வயதிடைய இளம் பெண்கள் தமிழ்நாட்டில் 3,38,649 பேர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவருக்கும் HPV தடுப்பூசி போடும் பணி வருகின்ற 27.01.2026 அன்று முதலமைச்சர் அவர்களால் சென்னை நந்தம்பாக்கத்தில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. பைலட் பேஸ் என்கின்ற வகையில் 3,38,649 பேருக்கு தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை, அரியலூர் ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு 30,209 பேர் பயன்பெறுகின்ற வகையில் தடுப்பூசி திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் தொடங்கி வைக்கப்பட உள்ளார்கள். ஏற்கெனவே திட்டமிடப்பட்ட அனைவருக்கும் படிப்படியாக இத்தடுப்பூசி செலுத்தப்படவிருக்கிறது. இத்தடுப்பூசிக்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.14,000/- வரை செலவாகும். தமிழ்நாடு அரசு இத்தடுப்பூசி இலவசமாக வழங்க உள்ளது.

"நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம்

கடந்த 02.08.2025 அன்று முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டமகத்தான திட்டம் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டம் ஆகும். இதுசாதாரண ஒரு முகாம்களாக இல்லாமல் முழு உடற் பரிசோதனை முகாம்களாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு ஒன்றியத்திற்கு 3 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்டமக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவானமக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகைகளிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும், 1256 முகாம்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர்அவர்கள் அறிவித்து முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

அந்த வகையில் 24.01.2026 அன்று வரை தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்துள்ள முகாம்களின் எண்ணிக்கை 1053, இந்நிலையில் மிக விரைவில் பிப்ரவரி 2 வது வாரத்திற்குள் ஒட்டுமொத்த முகாம்களும்நடத்தி முடிக்கப்பட்டுவிடும். சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம் என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களின் இலக்கு மிகப் பெரிய அளவில் வெற்றியடைந்திருக்கிறது. இதுவரை இம்முகாமில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 15,88,421 பேர். இந்த முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்படி, 45,112 பேர் புதிய அட்டையினை பெற்றிருக்கிறார்கள். மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் 53,996 பேருக்குவழங்கப்பட்டுள்ளது.

மேலும் இம்முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மருத்துவம் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல்மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய மருத்துவம் என்று 17 வகையானமருத்துவ முறைகள் இதில் அடங்கியிருக்கிறது. அந்தவகையில் இந்த திட்டம் மிகப் பெரிய அளவில்வெற்றிபெற்றிருக்கிறது.

ரூ.40 கோடி மதிப்பீட்டில் குடியாத்தம் அரசு மருத்துவமனை திறப்பு விழா

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்குபிறகு 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும்நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவமனைகள், 642 துணை சுகாதார நிலையங்கள் போன்ற ஏராளமான புதிய மருத்துவக் கட்டமைப்புகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறோம்.

அந்த வகையில் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ள ரூ.40 கோடி செலவில் வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் அமைந்திருக்கின்ற மருத்துவமனை 253 படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை நேற்று (26.01.2026) மாலை 3 மணிக்கு நானும், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும் துறையின் உயரலுவலர்கள் ஆகியோர் அம்மருத்துவமனையை தொடங்கி வைக்க இருக்கிறோம். தொடர்ந்து தமிழ்நாட்டில் புதிய மருத்துவ கட்டமைப்புகள் என்பது தொடர்ச்சியாக தொடங்கப்பட்டும், பயன்பாட்டிலும் இருந்து வருகிறது என்பதினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### டெங்கு பாதிப்பு கட்டுக்குள் உள்ளது

டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய் பாதிப்புகள் கடந்த காலங்களை விட தற்போது கட்டுக்குள் இருக்கிறது. டெங்குபாதிப்பு என்பது 2012, 2017 ஆகிய ஆண்டுகளில் டெங்கு பாதிப்பு தமிழ்நாட்டில் அதிகமாக இருந்தது. அதாவது 2012இல் 66 உயிரிழப்புகளும், 2017இல் 65 உயிரிழப்புகளும் டெங்குவினால் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு டெங்குவினால்ஏற்படும் பாதிப்பு ஓரிலக்கம் என்கின்ற வகையில் மிகப் பெரிய அளவில் குறைக்கப்பட்டு கட்டுக்குள்இருக்கின்றது. இதற்கு முன்பு இருந்த அதிமுக அரசைப் பொறுத்தவரை டெங்கு பாதிப்பு வெறும்அரசு மருத்துவமனைகளில் வருகின்ற பாதிப்புகள் மட்டுமே பத்திரிக்கையாளர்களுக்கு செய்திகளாகதந்திருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தனியார் மருத்துவமனைகளிலும் உள்ள டெங்கு பாதிப்பை கணக்கெடுத்து மக்களுக்கு அறிவித்து வருகிறோம்.

இப்படி கூடுதலான பாதிப்புகள் இருக்கின்றது என்கின்ற பயத்தை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர்களும் அறிந்து கொள்கின்ற வகையில் செய்து வருகிறோம். அந்த வகையில் இதற்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அந்த வகையில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் இருக்கின்றது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும்மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி ராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக பதிவாளர் மரு. சிவசங்கீதா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் கோவிந்தராஜன் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.